DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF PROCEDURE )
IN THE COURT OF DISTRICT MUNSIF, VANIYAMBADI, VELLORE DISTRICT

| | |
|---|---|
| Name: வெங்கடாசலம் | Father's Name: சீனிவாசன் |
| Village: ஆவாரங்குப்பம் | Taluk: |
| Caste: | Calling: |
| Religion: | Age: 62 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 07.11.2023

இம எண்.300/2018 அவ எண்.58/2017 எ.ம.சா.1

மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி

1. 22.01.2018 அன்று என் மீதும், எனது மனைவி மீதும் திம்மாம்பேட்டை காவல்நிலையத்தில் புகார் அளித்தார். நான் அதன் பின்னரும் வழக்கு சொத்திலுள்ள புளியமரத்திலுள்ள புளிய பழம் அறுவடை செய்யவிடாமல் தடுத்து வருகிறோம் என்றால் அது உண்மையல்ல. என் பெயரில் ஏற்பட்ட 05.10.1987 தேதியிட்ட கிரைய ஆவணத்தில் ராமமூர்த்தி மற்றும் தியாகு ஆகியோரிடம் கையொப்பம் பெற்றோமோ என்றால் பெறவில்லை. நான் 05.10.1987 அன்று கிரையம் பெற்றது முதல் பட்டா, சிட்டா என் பெயரில் இன்று வரை மாறவில்லை என்றால் சரிதான்.

2. வழக்கு சொத்திற்கு இன்று வரை தியாகு பெயரில் பட்டா சிட்டா இருந்து வருகிறது என்றால் சரிதான். 22.01.2018 தேதிக்கு பிறகு பலமுறை நாங்கள் வழக்கு சொத்தில் இடையூறு செய்ததாக பலமுறை புகார் அளிக்கப்பட்டது என்றால் சரியல்ல, ஒருமுறை தான் அளிக்கப்பட்டது, நாங்கள் நீதிமன்ற உத்தரவின் படி நடந்துகொண்டோம். காவல்நிலையத்தில் வழக்கு சொத்திற்கு நீதிமன்ற உத்தரவின் படி இடையூறு செய்யமாட்டோம் என எழுதிக்கொடுத்தோம் என்றாலும், ஆனாலும், அதன்பிறகு தொடர்ந்து இடையூறு செய்து வந்தோம் என்றாலும் அது உண்மையல்ல.

3. மனுதாரருக்கு சாதகமாக நீதிமன்றம் இடைக்கால உறுத்துக்கட்டளை வழங்கியிருந்த நிலையில், அதனை மதிக்காமல் நாங்கள் இடையூறு செய்தோம் என்றால் சரியல்ல. நாங்கள் பலமுறை நீதிமன்ற உத்தரவின் மீறி இடையூறு செய்ததற்கு காவல்நிலையத்தில் புகார் அளித்தும் நடவடிக்கை எடுக்கப்படாததால் தான் இந்த மனுவினை மனுதாரர் தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. மனுதாரர் காவல்நிலையத்தில் அளித்த புகார்கள் தொடர்பாக என் மனைவி கவுன்சிலராக இருந்ததை பயன்படுத்தி நடவடிக்கை எடுக்கவிடாமல் தடுத்துவிட்டோம் என்றால் சரியல்ல, என் மனைவி 2008ம் ஆண்டிற்கு முன்பு தான் கவுன்சிலராக இருந்தார்.

4. நாங்கள் நீதிமன்றத்தில் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால உறுத்துக்கட்டளை உத்தரவினை மீறி செயல்பட்டதால் இந்த மனு அனுமதிக்கப்படவேண்டும் என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை முடிவுற்றது)